## பெருநகர சென்னை மாநகராட்சி

## செய்தி வெளியீடு

**செ.வெ.எண். 120** **நாள்: 05.06.2025**

தமிழ்நாடு அரசு கேளிக்கை வரி சட்டம் 2017-ன்படி, பெருநகர சென்னை மாநகராட்சியில் 01.07.2017 முதல் கேளிக்கை வரி வசூலிக்கப்பட்டு வருகிறது. கேளிக்கைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/2025), பிரிவு 2 (8) மற்றும் 3 (10) கீழ் பின்வருமாறு சட்டத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு 17.04.2025 முதல் நடைமுறைப்படுத்தப்படுவதாக மாவட்ட அரசிதழ் எண்.172 –ன் மூலம் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

<u>சட்டம் 2017 பிரிவு 2 (8)</u>

"கட்டணம், பங்களிப்பு, சந்தா அல்லது ஏதேனும் வகையான கட்டணங்கள் வசூலித்து நுழைவதற்கான அனுமதி வழங்கப்படும் மண்டபங்கள், பள்ளி/கல்லூரி மேடைகள், அரங்கங்கள், வளாகங்கள் அல்லது பிற இடங்களில் நடத்தப்படும் கச்சேரிகள், நாடகங்கள், நிகழ்ச்சிகள், நிகழ்வுகள் மற்றும் பிற பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள்."

<u>சட்டம் 2017 பிரிவு 3 (10)</u>

" ஏதேனும் நிறுவன வளாகத்தில் அல்லது பிற இடங்களில் நடத்தப்படும் கச்சேரி, நாடகம், நிகழ்ச்சி அல்லது பிற பொழுதுபோக்கு நிகழ்வுகளுக்கான ஒவ்வொரு நுழைவுக் கட்டணத்திலும் 10 சதவீதம் வீதத்தில் பொழுதுபோக்கு வரி வசூலிக்கப்படும்."

மேற்கண்ட சட்டத் திருத்தத்தின்படி, பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள கல்வி நிலையங்கள் / கல்லூரி வளாகங்களிலுள்ள அரங்கங்களில் அல்லது பிற இடங்களில் நடைபெறும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளுக்கு விற்பனை செய்யப்படும் நுழைவுச் சீட்டில் 10 சதவீதம் கேளிக்கை வரியாக வசூலிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இவ்வாணை 17.04.2025 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**